காற்றும் ஒரு கணம் வீச மறுந்தது
கடலும் ஒரு நொடி அமைதியாய் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தது

தீயினில் எரியாத தீபங்களே எம்
தேசத்தின் நிலையான வேதங்களே 2
மண்ணினில் விதையான முத்துக்களே நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் புலி நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்

தீயினில் எரியாத தீபங்களே எம்
தேசத்தின் நிலையான வேதங்களே

கடலினில் கடற்புறா பயணங்கள் போனது
சிறிலங்கா இராணுவம் பொறி வைக்கல் ஆனது 2
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின் படி நஞ்சை குடித்தபின் சாய்தனர்
இளமையில் சருகாகி போனவரே எம்
இதயத்தில் உருவான கோவில்களே
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் புலி நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்

தீயினில் எரியாத தீபங்களே எம்
தேசத்தின் நிலையான வேதங்களே

அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பளகன் ரெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார் 2
ஆகிய வேங்கைகள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர் 2
மக்களுக்காக கடல் சென்றீரே
மணமாலைகள் வாட முன்னர் போனீரே
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் புலி நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்

தீயினில் எரியாத தீபங்களே எம்
தேசத்தின் நிலையான வேதங்களே

எங்களின் கடலீலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது 2
இந்திய அரசு ஏன் துணை போனது
இடியுடன் பெருமழை ஏன் உருவானது 2
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம் நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் புலி நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்

தீயினில் எரியாத தீபங்களே எம்
தேசத்தின் நிலையான வேதங்களே 2
மண்ணினில் விதையான முத்துக்களே நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்
புலி நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள் 2